செய்தி வெளியீடு எண்: 11-2018 நாள்: 3.8.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென சிறப்பான வகையில் பணிகளை மேற்கொண்டு வரும் தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பல வகைகளில் சிறப்பான திறமைகளை வெளிக்கொணர்ந்திடும மாற்றுத்திறனாளிகளுக்கு "தேசிய விருது 2018" வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென சிறப்பான வகையில் பணிகளை மேற்கொண்டு வரும் தனிநபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பல வகைகளில் சிறப்பான திறமைகளை வெளிக்கொணர்ந்திடும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை ஊக்குவித்திடும் விதமாக மத்திய அரசால் ஆண்டுதோறும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. 2018-ம் ஆண்டிற்கான தேசிய விருதுகள் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் நலச் சட்டம் 2016-ல் வரையறுக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் வகைகளுக்கேற்ப பல்வேறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சிறப்பாக பணிபுரியும் மாற்றுத்திறனாளி/ சுயதொழில் புரிவோர் (Best Employees/ self Employed with disabilities), சிறந்த பணியமர்த்தும் அலுவலர் மற்றும் சிறந்த நிறுவனம் (Best Employers and Placement Officer or Agency), மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த தனிநபர்/ நிறுவனம் (Best Individual and Institution working for the cause of persons with disabilities), மாற்றுத்திறனாளிகளில் முன்மாதிரியாக திகழ்பவர்கள் (Role Model), மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் சிறந்த செயல்முறை ஆராய்ச்சி பணி/ தொழில்நுட்படம் அல்லது கண்டுபிடிப்பு (Best Applied Research or Technology Innovation/ Product Development aimed at improving the life of persons with disabilities), மாற்றுத்திறனுடையோர்களின் தடையற்ற சூழலுக்கான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்திய சிறந்த பணிக்காக (Outstanding Work in the Creation of Barrier-Free Environnment for the Persons with Disabilities), மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு பணிகளை மிக சிறப்பாக மேற்கொண்ட மாவட்டம் (Best District in Providing Rehabiliation Services), தேசிய மாற்றுத்திறனுடையோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் திட்டத்தினை செயல்படுத்தும் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனம் (Best State Channelizing Agency of the National Handicapped Finance and Development Corporation), சிறந்த படைப்பாற்றல் திறனுடைய மாற்றுத்திறனுடைய நபர்கள் (Outstanding Creative Adult Persons with Disabilities), சிறந்த படைப்பாற்றல் திறனுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகள் (Best Creative Child with Disabilities),

சிறந்த பிரெய்லி அச்சகம் (Best Braille Press), மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்த உகந்ததான சிறந்த இணையதளம் (Best Accessible Website), மாற்றுத்திறனாளிகளின் அதிகார பகிர்வினை ஊக்கப்படுத்தும் சிறந்த மாநிலம் (Best state in Promoting empowerment of persons with Disabilities) மற்றும் சிறந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் (Best Sports persons with Disabilities) ஆகிய 14 பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள்/ நிறுவனங்கள் இதற்கான விவரங்களை www.disabilityaffairs.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். மேலும், உரிய விண்ணப்ப படிவத்தை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அல்லது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விழுப்புரம் என்ற அலுவலகத்திலிருந்து பெற்று அனைத்து இணைப்புகளுடன் வருகிற 08.08.2018-க்குள் 2 நகல்களில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விழுப்புரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 08.08.2018-க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியுடையவர்கள் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.